1994 ஏப்ரல் 6]

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலேதான் அங்கே மக்கள் தொகை குறைவு என்று அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அரசாங்கம் சொல்லுகிற சட்ட விதிகளுக்கு ஏற்ப 30,000 மக்கள் தொகை இருக்கிற காரணத்தாலேதான் அந்தக் கோரிக்கையை வைக்கிறோம். மேலும் அந்தத் தாய் சேய் நல விடுதியிலே பணியாளர்கள் நிரந்தரமாகத் தங்கிப் பணியாற்றுவதற்கு லைட் வசதி இல்லை. அவர்கள் அங்கே நிரந்தரமாகத் தங்கிப் பணியாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகையைப் பொறுத்த வரையில் அதிகமாக இருந்து, ஆரம்ப சுகாதார நிலையம் குறைவாக இருக்குமேயானால் பட்டியல் 1 -லே எடுத்துக்கொள்ளப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மற்றபடி துணை சுகாதார நிலையத்தில் இருக்கும் வசதிகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது பற்றி ஆய்வு செய்யும்படி உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 204. திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

204—

கும்பகோணத்திலிருந்து இயக்கப்பட்ட சில திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மீண்டும் இயக்குதல்.

***22416**—திரு. இராம. இராமநாதன் :*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்திலிருந்து, திருப்பதி, இராமேஸ்வரம், பாலக்காடு ஆகிய இடங்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பதிக்கு தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் வழியாக பேருந்து இப்பொழுது இயக்கப்படுகிறது. பாலக்காட்டிற்கு பேருந்து கேரள அரசின் அனுமதியை மீண்டும் பெற்ற பின்பு இயக்கப்படும். இராமேஸ்வரத்திற்கு இயக்கப்பட்ட பேருந்து, பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் நிறுத்தப்பட்டது.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் உலகப் பிரசித்தி வாய்ந்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு

அனைத்துத் திருக்கோவில்களும் நிறைந்திருக்கிற திருக்கோவில் நகரமாக இருக்கிறது. எனவே அந்தத் திருக்கோவில்களுக்கு வருகின்ற பக்தர்கள் எல்லாம் தொடர்ச்சியாக திருப்பதி, இராமேஸ்வரம், கோவை வழியாகப் பாலக்காடு போன்ற இடங்களுக்குச் செல்லும் பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. முன்பு இந்த வழித்தடங்கள் எல்லாம் இயக்கப்பட்டு, அதற்குப் பிறகு டீசல் தட்டுப்பாடு என்ற நிலையில் அன்றைக்கு நிறுத்தப்பட்டன. குறிப்பாக இராமேஸ்வரம் செல்லுகின்ற பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமான அளவுக்கு, அனைவருமே செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே இராமேஸ்வரம் செல்லுகின்ற டி.டி.சி. பேருந்தையும், அதைப்போல திருப்பதிக்கு ஜே.ஜே.டி.சி. என்கின்ற சிறப்பான பேருந்தையும் கும்பகோணத்திலிருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். திருப்பதிக்கு தஞ்சையிலிருந்து பேருந்து செல்வதைச் சொல்லுகிறார்கள். தஞ்சையிலிருந்து செல்வதைவிட கும்பகோணத்திலிருந்துதான் அதிகமான மக்கள் இன்றைக்கு எல்லாம் வல்ல ஆண்டவனைத் தரிசனம் செய்து, தமிழகம் நன்றாக இருக்க வேண்டும், புரட்சித் தலைவி அவர்கள் நீடூழி வாழ்ந்து, நல்லவிதத்திலே இந்த ஆட்சி நிலைத்து, நன்றாக ஆட்சி செய்ய வேண்டுமென்று வேண்டுகோளை வைத்து, அங்கே சென்று வழிபடுகிறார்கள். எனவே அந்தப் பேருந்தையும் அங்கேயிருந்து விடுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கும்பகோணத்திலே உள்ளவர்கள்தான் புரட்சித் தலைவி நீடூழி வாழவேண்டும் என்று வணங்குகிறார்கள் என்று சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கிற அத்தனை மக்களும் புரட்சித் தலைவி நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள், வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபடி, கேரள மாநிலம் பாலக்காட்டுக்குச் சென்ற பேருந்துகள் 24.10.1990-ல் தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டன. அதற்குக் காரணம், அண்டை மாநிலங்களான கேரளத்திற்கும் தமிழகத்திற்கும் இருந்த ஒப்பந்தம் முடிவடைந்த காரணத்தாலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதற்குப் பிறகு அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்குமானால் இயக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சையிலிருந்து திருப்பதிக்குச் செல்கின்ற பேருந்துகள் கும்பகோணத்திலிருந்து இயக்கப்படுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒரு பக்திமான்.

ஆகவே, திருப்பதிக்கு அடிக்கடி செல்லவேண்டுமென்று விரும்புவார் போல இருக்கிறது. ஆகவே அவருடைய கோரிக்கையையும் மக்களுடைய கோரிக்கையாக ஏற்று அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் கேட்டவுடனேயே கொடுக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்தப் புனித ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பக்திமானுக்கு நிச்சயமாகச் செய்கின்றேன் என்ற நல்ல எண்ணத்தோடு மீண்டும் அந்தப் பேருந்தை இயக்குவதற்கான வாக்கினைக் கொடுத்ததற்கு அவருக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல முன்பு கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு ஒரு சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸும் வந்துகொண்டிருந்தது. அந்தப் பேருந்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணம் வந்து மீண்டும் தொடங்கி வைப்பதற்கான விழாவினையும் நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் தமிழகத்தின் ஒப்புயர்வற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டினுடைய மக்களுக்காக தன்னை வருத்திக்கொண்டு இங்கே சென்னையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சமாதிக்கு முன்பாக உண்ணா நோன்பை மேற்கொண்டு, மிகவும் சிரமமான சூழ்நிலையிலே கூட இந்த நாட்டுமக்களுக்காக உழைத்து, தன்னுடைய உயிரையும் தியாகம் செய்து மக்களுக்காகப் போராடுவேன் என்று சொன்ன அந்த தினத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. (மணியடிக்கப்பெற்றது) எனவே சூப்பர் டீலக்ஸ் பஸ் விடமுடியாத சூழ்நிலை அன்றைக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு திருப்பதிக்கு நிச்சயமாகப் பேருந்தை விடுவோம் என்ற உறுதியைக் கொடுத்ததோடு, சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸை கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருவார்களா என்பதையும் மிகவும் ஆர்வத்தோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் டீலக்ஸ் பேருந்துகள் கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்படுமா என்று கேட்டார்கள். சூப்பர் டீலக்ஸ் பஸ் மிக விரைவாக கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்படும். நீங்களும் சூப்பராக இந்த சட்டமன்றத்திற்கு வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 205, திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.